MC.18/2024

16.02.2026

PW2 – ரகுநாதன், த/பெ,ராஜா, வயது-73

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆஜர்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் –11.25 A.M,

விசாரணை முடிக்கப்பட்டநேரம் –11.38 A.M,.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 16.02.2026

(குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 43(2)ன் கீழ் சாட்சிக்கு அவரது முதன்மை சாட்சியம் நினைவுக்கூர்வதற்காக படித்து சொல்லப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை</u>:-

முதல் விசாரணையில் உள்ள விவரங்கள் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். மனுதாரர் உங்களுக்கு என்ன உறவு என்றால் என் அக்கா மகள். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் உள்ள பிரச்சனை உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்று மனுவிலும் ம,சா.1 முதல் விசாரணையிலும் எந்த பிரச்சனையும் இல்லை என்று சொல்லியுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். எதிர்மனுதாரர் என்ன பணி செய்கிறார் என்றால் சிங்கப்பூரில் ஓட்டுநர் பணி செய்திருந்தார் தற்போது கேபிள் ஆப்ரேட்டராக உள்ளார். கேபிள் ஆப்ரேட்டராக எதிர்மனுதாரர் வேலை செய்வதாக நீங்கள் சொல்வதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. எந்த ஆண்டு ஓட்டுநராக வேலை செய்வதற்கு சிங்கப்பூர் சென்று பின்னர் இந்தியாவிற்கு திரும்பினார் என்றால் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் சிங்கப்பூரில் எந்த வாகனத்திற்கு ஓட்டுநராக பணி செய்தார் என்றால் எனக்கு தெரியாது. சிங்கப்பூரில் எவ்வளவு மாத ஊதியம் எதிர்மனுதாரர் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. அங்கு பெற்ற ஊதியம் மனுதாரர்

மதுரா வங்கி கணக்கில் தான் செலுத்தினார் என்றால் எனக்கு தெரியாது. மனுதாரர் எதிர்மனுதாரர் சிங்கப்பூரில் வேலை செய்யும்போதே தாய் வீட்டிற்கு திரும்பி விட்டார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மனுதாரருடன் நல்ல முறையில் தான் இருந்தார் எனவும் உங்களுக்கு அவர்கள் இருவரின் வாழ்க்கை குறித்து எதுவும் தெரியாமல் தவறான சங்கதியுடன் முதல் விசாரணை சாட்சியம் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. மனுதாரரின் பெயரில் எதிர்மனுதாரர் சொத்து ஒரு பிளாட் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மனுதாரருடன் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் எனவும் நீங்கள் தான் அவரை அழைத்து வந்து உங்கள் பராமரிப்பில் மனுதாரரை வைத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு ஒரு மகன் உள்ளாரா என்றால் B.E படித்துவிட்டு வேலைக்கு செல்லாமல் தான் உள்ளார். மனுதாரரின் மகன் தனியார் நிறுவனத்தில் வேலை செய்வதாக மனுதாரர் வாய்மொழி சாட்சியத்தில் சொல்லியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் சம்பாதித்த பணத்தை மனுதாரர் வங்கி கணக்கில் செலுத்தி அதை அவர் எடுத்து நல்ல முறையில் தான் வாழ்ந்து வருகிறார் எனவும் நீங்கள் சொல்வதை போல் கஷ்ட ஜீவனம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.02.16 17:36:08 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.